

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், வி.லெட்சுமிபுரம் ஊராட்சியில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்.

## எழும்பூரில் புதிய கட்டிடம் அடிக்கல்!

*சென்னை, அக்.9-*

*எழும்பூர் தொகுதி, மண்டலம் 8, வார்டு எண்.108, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், 1.25 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்திற்கு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டினார்.*

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# ரூ.4.55 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், அக்,9–

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தலைமையில், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.4.55 கோடி மதிப்பீட்டில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளையும் வழங்கினார்.

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரியம்மாபாளையம் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.167.95 லட்சம் மதிப்பீட்டில் பெரியம்மாபாளையம் முதல் சீரானத்தம் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், பெரியம் மாபாளையத்தில் மாவட்ட ஊராட்சி பொது நிதி திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் பொது விழா மேடை அமைக்கும் பணியினையும், கரம்பியம் கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.18.42 லட்சம் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணயினையும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பூமி பூஜையிட்டு தொடங்கி வைத்தார்கள்.

மேலும், மூங்கில்பாடி ஊராட்சியில் ஆதிதிராவிடர் காலனி பகுதியில் ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாயுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், குன்னம் ஊராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ், ரூ.42.6 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியுடன் புதிய பைப் லைன், மோட்டார் அறையுடன் கூடிய ஆழ் துளை கிணறு அமைக்கும் பணியினையும், வரகூர் ஊராட்சி, கொளப்பாடி சாலையில், ரூ.37.9 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி புதிய பைப் லைன், மோட்டார் அறையுடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியினையும், வரகூர் கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் 18.42 லட்சம் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணியினையும், கொளப்பாடி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.10.91 லட்சம் மதிப்பீட்டில் உணவு தானிய கிடங்கு கட்டும் பணியினையும், கொளப்பாடி கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.29.97 லட்சம் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணியினையும், துங்கபுரம் ஊராட்சியில் மெயின் சாலையில் ரூ.15.74 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணியினையும், துங்கபுரம் ஆதிதிராவிடர் தெருவில் ரூபாய் 8.38 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணியினையம், துங்கபுரம் ஊராட்சி கோவில் பாளையம் அண்ணா நகர் செல்வராஜ் வீடு அருகில் ரூ.10.30 லட்சம் மதிப்பிட்டிலும், மூக்கன் வீடு அருகே ரூ.10.60 லட்சம் மதிப்பீட்டிலும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளையம், கிளியப்பட்டு கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.18.42 மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைக்கும் பணி என மொத்தம் ரூபாய் ரூ.3.98 கோடி மதிப்பிலான 16 வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

மேலும் குன்னம் பேருந்து நிலையத்தில்,15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுகாதார வளாகம் மற்றும் வரகூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ரூ.2.72 லட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஊராட்சி பொது நிதியில் கட்டப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறு மின் விசை பம்பு மற்றும் கொளப்பாடி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 10.91 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவு தானியக் கிடங்கு மற்றும் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 13.57 லட்சம் மதிப்பில் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் நல மைய கட்டிடம், மாவட்ட ஊராட்சி பொது நிதியின் கீழ் 5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேருந்து நிழற்குடை மற்றும் துங்கபுரம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 11.97 லட்சம் மதிப்பீட்டியில் கட்டப்பட்டுள்ள புதிய குழந்தைகள் நல மையக் கட்டடம் என ரூ.57.11 மதிப்பீட்டிலான 6 முடிவற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் பயன்பாட்டிற்கு போக்குவரத்து துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, குன்னம் மற்றும் துங்கபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் வழங்கினார்.

மேலும் வெண்மணி ஊராட்சி புதுக்குடிசை கிராமத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடமாடும் நியாய விலை கடையினை போக்குவரத்து துறை அமைச்சர் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் கொடியசைத்து தொடங்கி வைத்து, 161 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்திவாசிய பொருட்களை வழங்கிடும் வகையில் இயக்கப்படவுள்ள நடமாடும் நியாய விலைக் கடையில் இருந்து மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். பின்னர் வேட்டக்குடி கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டு கழகம் சார்பில் வேட்டக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் வாயிலாக 5 பயனாளிகளுக்கு ரூ.2.50 லட்சம் நீர் பாசன மானியத் தொகைக்கான காசோலையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்ததாவது:–

இந்நிகழ்வுகளில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சிஇ.ராஜேந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் பாண்டியன், மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தரராமன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுரேஷ்குமார், துணை பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) சிவக்குமார், வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் டாக்டர் அ.கருணாநிதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வகுமார், திருமதி. பூங்கொடி, வட்டாட்சியர் திருமதி. கோவிந்தம்மாள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம் கோலியனூர் கிழக்கு ஒன்றியம் இளங்காடு ஊராட்சியில் ஒன்றியச் செயலாளர் பி.தெய்வசிகாமணி தலைமையில் மாணவர் அணி கே.சபரிநாதன் ஏற்பாட்டில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல், செயலாளர் கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், ஒன்றிய நிர்வாகிகள் அவைத் தலைவர் இரா.கண்ணப்பன், சௌந்தர், குணசேகர், ஜெயபால், ஸ்ரீதர், மாவட்ட கவுன்சிலர்கள் கேசவன், நகர பொருளாளர் இளங்கோ, ஒன்றிய குழு உறுப்பினர் சௌந்தர், மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன், இலக்கிய அணி வல்லவன், மாவட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு இளைஞர் அணி பிரபு, சதீஷ், குணா, மாணிக்கம், அன்பு, குட்டி, பாஸ், பார்த்திபன், வெங்கடேசன், பாலாஜி சூர்யா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



கரூரில் 3வது புத்தகத் திருவிழாவை மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் துவக்கி வைத்தார். எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், (குளித்தலை), ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), கே.சிவகாமசுந்தரி (கிருஷ்ண ராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெரோஸ் கான் அப்துல்லா அரங்குகளை பார்வையிட்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இராசேந்திரன்
### அக்டோபர் 9 (2023)



**தனது இளம் பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கி, 1970 முதல் 2002 வரையிலான 32 ஆண்டுகள் தொடர்ந்து சேத்துப்பட்டு ஒன்றியச் செயலாளர், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினர், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவர் என பல பொறுப்புகள் வகித்தவர்.**

**1989, 1996 ஆகிய இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தச்சம்பாடி ஊராட்சி மன்ற தலைவர், போளூர் வீட்டு வசதி வாரிய சங்க தலைவர், பால் கூட்டுறவு சங்க தலைவர் என பல பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

